

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நேற்று (11.9.2025) சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று 13.9.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள "சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50" பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (11.09.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் "சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா" நடத்துவது குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.ச.சண்முகம், முதலமைச்சரின் இணைச் செயலாளர் கோ.லட்சுமிபதி, அரசு அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சென்னை மாநகராட்சி துணை ஆணையர் எம்.பிருத்திவிராஜ், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கரூரில் நடைபெறும்

# கழக முப்பெரும் விழா - திருப்புமுனை மாநாடாக அமையும்!

## விழா ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜியுடன் பார்வையிட்டு – கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

கரூர், செப். 12 –

கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா திருப்புமுனை மாநாடாக அமையும் என விழா நடைபெறும் இடத்தை மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜியுடன் பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் அமைச்சர் கே. என். நேரு கூறினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் கோடங்கிப்பட்டியில், வருகின்ற செப்டம்பர் 17 அன்று கழகத்தின் கொள்கை திருவிழாவாம், தி.மு.க. முப்பெரும் விழா நடைபெறுகின்றது. விழா ஏற்பாடுகளை தலைமைக் கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. நேற்று பார்வையிட்டனர். முப்பெரும் விழாவை முன்னிட்டு விழா நடைபெறும் மைதானத்தில் ராட்சத பலூனை கே.என்.நேரு, வி. செந்



தில் பாலாஜி பறக்க விட்டனர். பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

கழக முப்பெரும் விழா கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் கரூரில் கோடங்கிபட்டியில் நடைபெறுகிறது.

தி.மு.க. முப்பெரும் விழா 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான திருப்புமுனை மாநாடாக அமையும்.

கரூரில் வரும் 17ஆம் தேதி தி.மு.க. சார்பில் முப்பெரும் விழாவில் இந்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் தி.மு.க. மூத்த தலைவர்கள் கலந்து கொண்டு தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு விருதுகளை வழங்கி கௌரவிக்கின்றனர். மாவட்டக் கழக செயலாளர் செந்தில் பாலாஜி சிறப்பான முறையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

அவர் சாதாரண கூட்டங்களையே மாநாடு போல் நடத்துபவர். கோவையில் ஏற்கனவே பல கூட்டங் களை நடத்தி இருக்கிறார். கரூர் மட்டு மின்றி நாமக்கல், ஈரோடு போன்ற பகுதிகளில் சென்று ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். என்னை பொறுத்தவரை திருச்சி மாவட்டத்தில் இருந்து அதிகமான அளவில் தொண்டர்கள் அழைத்து வந்து செந்தில் பாலாஜி எடுக்கின்ற ஏற்பாடுகளுக்கு உறுதுணையாகவும், எவ்வளவு பேர் சொல்கிறார்களோ அவ்வளவு பேரை பங்கேற்க செய்வோம்.

கோடங்கிபட்டியில் 50 ஏக்கர் பரப்பளவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான திருப்புமுனை மாநாடாக நடைபெறும். இவ் விழாவில் சுமார் 3 லட்சம் பேர் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ, கே. சிவகாமசுந்தரி, மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை நகராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு பட்டாக்கள் வழங்கினர். உடன் சேர்மன் சுப்பாராஜா, நகரச் செயலாளர் ஏ.கே. மணி, நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபுஜி, நகர்மன்ற உறுப்பினர் சிவா, ஜோதி ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இதுதான் திராவிடப் பொருளாதாரம்!



தொழிலாளர்கள் வசதியான வாழ்க்கை பெற்று அப்படியே தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும் என்று நினைப்பது கம்யூனிசம். முதலாளிகள் மிக மிக வசதியான வாழ்க்கையை பெற்று அப்படியே அனுபவிக்க வேண்டும் என்பது முதலாளித்துவம்.

**ஆனால் தொழில் தொடங்குவதற்கும் தொழில் செய்வதற்கும் ஒரு இணக்கமான சூழல் உருவாக்கி, தொழிலாளர்களையும் நலமாக வைத்து, அதன் பின்னர் அந்த தொழிலாளிகள் தொழில் தொடங்க தேவையான கட்டமைப்பை செய்து கொடுத்து இருப்பது திராவிடம்.**

எத்தனை நாட்கள் தான் அவர்களை தொழிலாளியாகவே வைத்திருப்பீர்கள்? தொழிலாளியாக இருந்து வாழ்வில் வளம் பெற்று அடுத்து அவர்கள் முதலாளியாக வேண்டும் என்பதுதான் திராவிட பொருளாதாரம்.

தென்மாநிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கேரளாவில் திறமையான டெக்னீசியன்கள் இருப்பார்கள். அவர்கள் சரியான நேரத்திற்கு வருவார்கள், திறமையாக வேலை செய்வார்கள், சரியான ஊதியம் பெறுவார்கள். அதனுடன் அவர்கள் அப்படியே இருந்து விடுவார்கள்.

ஆந்திரா பகுதிகளில் சொல்லவே வேண்டாம். அங்கே ஒருவர் அங்கே இருக்கும் ஜாதி கட்டுமானத்தை மீறி எல்லாம் முதலாளியாக மாறுவது என்பது மிக கடினம். கடைசிவரை தொழிலாளியாகவே இருப்பார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான் டெக்னீசியன்களாக இருந்தாலும் சரி; ஹோட்டல் தொழில் செய்பவராக இருந்தாலும் சரி; வேறு எந்த மாதிரியான தொழிலிலும் உழைத்து திறமை கண்டவர்கள் முதலாளியாக மாற முடியும். அடையாறு ஆனந்த பவன் ஹோட்டல் அதிபரின் பேட்டியை இதற்கு ஒரு உதாரணமாக கூட எடுத்துக் கொள்ளலாம். அவர் சொல்லி இருப்பார் பெரியார் வந்த பின்னர் தான் எல்லா வகுப்பினரும் ஹோட்டல் தொழிலில் இறங்க முடிந்தது என்று. இதுபோக. கண் முன்னே ஆயிரக் கணக்கான உதாரணங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

**அம்பத்தூர் தொழில் பேட்டை துவங்கி ஓசூர், கோயமுத்தூர், கப்பலூர் சிட்கோ வரை ஏராளமான தொழிற்பேட்டைகளில் வேலை விஷயமாக சென்றிருக்கிறேன். அங்கே எல்லாம் தொழிலாளியாக இருந்து முதலாளியாக மாறிய ஏராளமான தொழில் முனைவோர்களை பார்த்திருக்கிறேன். அதற்கான பிளாட்பார்மை அமைத்துக் கொடுத்தது, இதுபோன்ற தொழில் பேட்டைகளை உருவாக்கிய கலைஞர் அவர்களின் திமுக தான். இதைத்தான் திராவிட பொருளாதாரம் என்கிறோம்.**

தொழிலாளியாக இருக்கும் வரை அவனுக்கு தேவையான வசதிகளை செய்து கொடு. அடுத்த கட்டமாக அவனை தொழில் முனைவோர் ஆக்கி, முதலாளி ஆக்கு என்பதுதான் திராவிட பொருளாதாரம். தொழில் செய்ய வருபவர்களை எல்லாம் அடித்து துரத்தி விட்டு கஞ்சித் தொட்டி திறப்பதை விட, அவர்கள் மூலம் வளர்ந்து நாம் அடுத்த கட்ட வளர்ச்சியை பெறுவதில் தான் கவனமாக இருக்க வேண்டும்.

அதைத்தான் திராவிட பொருளாதாரம் சொல்கிறது. தற்போது தமிழ்நாட்டிற்கு திராவிட மாடல் முதல்வர் அவர்கள் கொண்டு வரும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எத்தனையோ சப் காண்ட்ராக்டர்கள் தேவை. அவர்களெல்லாம் வானத்தில் இருந்து குதித்தா வரப்போகிறார்கள்? எல்லாம் நம் மக்கள். இங்கே தொழிலாளர்களாக இருந்து தொழிலை கற்று அடுத்த நிலைக்கு முன்னேறியவர்கள். இன்று அவர்களும் ஒரு முதலாளிகள்.

**இதுதான் திராவிட பொருளாதாரம்.**

**பேராசிரியர் முரளிக்கண்ணன்**

### சமூக நீதிப் பாதைக்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழும்

# தியாகி இமானுவேல் சேகரனார் நினைவைப் போற்றி வணங்குகிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



**சென்னை, செப். 12 -**

**தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாள் நேற்று!**

**இந்நாளில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரனார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணங்கினார்.**

**அதனையடுத்து வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "சமூகநீதிப் பாதைக்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழும் தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவைப் போற்றி வணங்குகிறோம்!" என்று குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

தீண்டாமை, இரட்டைக் குவளை முறை, சாதிய ஒடுக்குதல் போன்ற சமூகச் சழக்குகளுக்கு எதிராக வீரியமிகுந்த போராட்டங்களை முன்னெடுத்த சமத்துவப் போராளி தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவு நாள்!

அவர் வாழ்ந்தது 32 ஆண்டுகளே... ஆனால் அவர் மறைந்தாலும் அவரது புகழ்ச்சுடர் அணையாமல் இன்றளவும் சமூகநீதிப் பாதைக்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழ்கிறது.

அத்தீரமிகு தியாகியின் நினைவைப் போற்றி வணங்குகிறோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான 10 படகுக் குழாம்களில் கடந்த 4 மாதங்களில்

# 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் படகுச் சவாரி!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, செப். 12 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் 10.9.2025 சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத் தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான அனைத்து ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி, ஓட்டல் மற்றும் படகு குழாம்களில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பல தரப்பட்ட அனைத்து உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஏற்றார்போல் உணவு வழங்கி விருந்தோம்பலில் சிறப்புடன் திகழ வேண்டுமெனவும் அடிப்படை வசதிகளில் குறைகள் இருப்பின் அதனை உடனடியாக சரிசெய்து விருந்தினர் களை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்றும், அனைத்து மண்டல அலகுகளிலும் வரவுசெலவு மற்றும் விருந்தினர்களிடம் விருந்தோம்பல் குறித்த தகவல்களை மண்டல மேலாளர் மற்றும் மேலாளர்களுடன் உரையாற்றி மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக, விருந்தோம்பல் சேவையை மேலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்று மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு அறிவுறுத்தினார், தொடர்ந்து சுற்றுலா தொகுப்பு செயல்திறன்பற்றியும் தீவுத்திடல் வரவு செலவு மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, முந்தைய ஆய்வுகூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மீதான நடவடிக்கை குறித்தும் ஆலோசணை மேற்க்கொண்டார்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான ஊட்டி, கொடைக்கானல், முட்டுக்காடு உள்ளிட்ட 10 படகு குழாம்களில் கடந்த 4 மாதங்களில் 15,17,397 சுற்றுலா பயணிகளின் படகு சவாரி மேற்க் கொண்டுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச.கவிதா, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.21 அருள்தாஸ்புரம் தத்தனேரி பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், உதவி ஆணையாளர் ரவிக்குமார், மாமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.